
p-54.

# ஐக்கிய தமிழகம்



ஜனசக்தி பிரசுராலயம்

ராயப்பேட்டை :: சென்னை-14.

N. S. Narayana Pillai

# ஐக்கிய தமிழகம்

~~T. B. 8~~

ப. ஜீவானந்தம்

★

ஜனசக்தி பிரசுராலயம்
ராயப்பேட்டை :: சென்னை-14.

ஜனவரி, 1954]

விலை 3 அணு.

ஜனசக்தி பிரஸ், மவுண்ட்ரோடு, சென்னை-6.

# ஐக்கிய தமிழகம்

## முன்னுரை

இன்று தமிழ் மக்களின் இலட்சிய கீதமாக ஐக்கிய தமிழகம் உருவாகி விட்டது. இன்றைய சென்னை ராஜ்யத்தின் பகுதி தமிழ் மக்களும், பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களும், மென்மேலும் இந்த கோஷத்தின் கீழ் உருண்டு திரண்டு வருகின்றனர். மொத்தத்தில் தமிழ் இனத்தின் இந்தப் புனித லட்சியத்தை, எதிர்ப்பவர்கள் இல்லை என்று சொல்லிவிடலாம்.

திரு - தமிழகத்தில் விழிப்புற்ற சராசரி தமிழனின் ஒரு தனி கோஷமாக, ஐக்கிய தமிழக கோஷம் தி ழ்கிறது. பிரஞ்சிந்திய இணைப்புக் கிளர்ச்சியில், பாண்டிச்சேரி, காரைக்கால் தமிழர்களின் உந்து சக்தியாக ஐக்கிய தமிழக கோஷமே உறுத்தெழுந்து நிற்கிறது.

தமிழர்களின் யதார்த்தச் சூழ்நிலையையும், அரசியல் திசை வழியையும், இதய கீதத்தையும் கருத்தூன்றிக் கணக்கிலெடுத்து, அண்மையில் கோவையில் நடந்த தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது மாநாடு, ஐக்கிய தமிழக அமைப்புப் பற்றிய முக்கியமான ஓர் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது. 3 கோடி தமிழ் மக்களின் இந்த இலட்சிய கோஷம், தமிழகத்தின் மூலை முடுக்கு, இண்டு இடுக்குகளெல்லாம் ஒலியும் எதிரொலியும் முழங்குமாறு செய்ய உறுதி பூண்டிருக்கிறது.

இன்றைய தமிழகத்தின் நிலைமை என்ன? மொழிவழி ராஜ்யக் கிளர்ச்சியின் முக்கியத்துவம் யாது? "ஐக்கிய தமிழகம்" எப்படி உருவாகி இருக்கிறது? காங்கிரஸின் இந்திய ஐக்கியம், திராவிட இயக்கத்தின் 'திராவிட நாடு', தமிழ் மக்களின் அரசியல் பொது கோஷம்—ஆகியவை பற்றிய கம்யூனிஸ்டு கட்சியின் கண்ணோட்டத்தையும் கருத்துரையையும் இந்நூலில் சுருக்கவிளக்கமாகக் கொடுக்கிறோம்.

# இன்றைய நிலைமை

தொன்மையான தமிழ்ப் பெரு மக்களின் தாயகம் இன்று ஒரே ராஜ்யத்தில் ஒரு கல்லில் செதுக்கப்பட்டதாக, ஒன்றாக இல்லை; துண்டு துண்டாகக் கூறு போடப்பட்டிருக்கிறது. ஆந்திர ராஜ்யம் பிரிந்த பிறகு சென்னை ராஜ்யத்தில் 14 ஜில்லாக்களில் 12 ஜில்லாக்கள் தமிழ் ஜில்லாக்கள். புதிய ஆந்திர ராஜ்யத்தில் சித்தூர் ஜில்லாவின் தெற்கெல்லையை அடுத்துள்ள பிரதேசத்தில் சின்னஞ் சிறிய தமிழகத் துண்டுகள் கிடக்கின்றன. திரு-கொச்சி ராஜ்யத் திலும் பிரெஞ்சிந்தியாவிலும் நமது அருமைத் தமிழகத்தின் கூறுகள் கிடக்கின்றன. தமிழனுக்குத் தமிழரசு இல்லை.

"நீலத் திரைகட லோரத்திலே நின்று
நித்தம் தவம்செய் குமரி"

வாழும் திருவிதாங்கூர் தமிழகத்திலுள்ள தமிழர்கள், தாய்த் தமிழகத் துடன் இணைந்து வாழத் துடியாய்த் துடிக்கின்றனர். அரசாங்க நிர் வாகம், சட்ட சபை, நீதிமன்றம், கல்வி கலைத்துறை ஆகியவற்றில் திரு-கொச்சி ராஜ்யத்தில் தமிழுக்கு மதிப்பில்லை. தங்கள் தாய் மொழிக்கு உரித்தான இடமில்லாத சாபத் தீடால் அங்குள்ள லட்சக் கணக்கான சாதாரண தமிழ் மக்கள், சர்க்கார் அலுவலகங்களிலும், போலீஸ், கல்வி இலாகா, நீதிமன்றம் முதலியவைகளிலும் மலையாள மொழிபோல், தமிழ் மொழிக்கு ஆட்சி மொழி அந்தஸ்து இல்லாத கொடுமையால் பலப்பல இன்னல்களுக் கிரையாகித் தவிக்கின்றனர். இதன் விளைவாக தமிழ், தமிழர், தமிழ் நாடு என்ற உணர்ச்சி, அங்கு சர்வ வியாபக உணர்ச்சியாக விளங்குகிறது. ஐக்ய தமிழக கோஷத் தின் கீழ், திரு-தமிழகம்தான் முன்னணியில் முதல் வரிசையில் நிற் கிறது.

ஐக்ய தமிழக கோஷத்தை முன் வைத்து 1948-ல் நடந்த பொதுத் தேர்தலில் போட்டி போட்ட திரு-த-நா-காங்கிரஸ், தம் பான் ஆட்சியின் கொடிய போலீஸ் அடக்குமுறையையும், சமஸ்தான காங்கிரஸின் அரசியல் சூதுவாதுகளையும் முறியடித்துக் கொண்டு, நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றது. தென் திருவிதாங்கூரிலுள்ள, கல் குளம், விளவங்கோடு போன்ற பின் தங்கியுள்ள தாலுகாக்களிலுள்ள தமிழ் மக்களுக்குக்கூட ஐக்ய தமிழகம் தான் உயிர்.

திரு - தமிழகத்தில், 'தாய்த் தமிழகத்தோடு இணையவேண்டும்' என்ற கோரிக்கைக்கே முதல் தாம்பூலம். இந்தக் கோரிக்கைக்கான போராட்டத்தில் அங்குள்ள தமிழ் மக்கள் வீறு கொண்டு நிற்கிறார்கள்.

சென்னை ராஜ்யத் தமிழகமும் மேற்படி போராட்டத்தை வரவேற்கிறது. எல்லாக் கட்சியினரும் அதற்கு முழு நிறை ஆதரவு அளிக்கிறார்கள். திரு-தமிழகப் போராட்டம், ஐக்ய தமிழகப் போராட்டத்தின் ஒரு பகுதி என்ற உணர்ச்சி, நாளொருமேனியாக வளர்கிறது.

பாண்டிச்சேரி, காரைக்கால் ஆகிய பிரஞ்சிந்தியத் திட்டுகளிலுள்ள தமிழகத்தில் நடைபெறும் இணைப்புக் கிளர்ச்சி இன்று மிகப் பெரும் முக்யத்துவம் அடைந்துவிட்டது. பாண்டிச்சேரி தென்னாற்காடு ஜில்லாவோடும், காரைக்கால் தஞ்சை ஜில்லாவோடும் இணைய வேண்டும் தாய்த் தமிழகத்தோடு இணைந்து ஒரே ஆட்சியின் கீழ் வாழ வேண்டுமென்று அங்குள்ள தமிழ் மக்கள் விரும்புகின்றனர். "பிரஞ்சு ஏகாதிபத்தியத்தின் கால்ஜோட்டு உதைபட்டு இனி அரைக்கணமும் அலறமாட்டோம். சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்யம் எனப்படும் பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ஆட்சி, உலகெங்கும் உதைபட்டு உதைபட்டு ஒழிக்கப்பட்டு வருவது போல், இந்த சுண்டைக்காய் பிரஞ்சு ஏகாதிபத்ய ஆட்சியும் இங்கிருந்து ஒழிய வேண்டும். பிரஞ்சு ஏகாதிபத்யம் இங்கிருப்பதால்தான், வியட்நாம் மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்த இங்கிருந்து நம் மக்களை கூலிப்படைகளாக அனுப்ப முடிகிறது" என்று பாண்டிச்சேரி காரைக்கால் மக்கள் எரிச்சல் அடைகிறார்கள். ஆசிய மக்களை நரவேட்டையாடும் சதித்திட்டத்தோடு, அமெரிக்க யுத்த வெறியர்கள், நமது புனித நிலத்தை யுத்த தளங்களாக்க நினைக்கும் பேராசைக்கும் புன்முயற்சிக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது என்று உள்ளங்குமுறுகிறார்கள்.

இதனால் பாண்டி, காரை மக்கள் இணைப்புக் கிளர்ச்சி வாகைசூட எத்தகைய விலை கொடுக்கவும் துணிந்துள்ளார்கள். சென்னை ராஜ்யத்திலுள்ள தமிழக ஒற்றுமைவாதிகளும், இந்திய ஜனநாயகவாதிகளும் உலக சமாதானவாதிகளும் இந்தக் கிளர்ச்சியை வரவேற்கின்றனர்; இது ஜெயக்கொடி நாட்ட ஆவன செய்ய முன்வருகின்றனர்

தமிழகத்தை ஒட்டிக்கிடக்கும் சித்தூர் ஜில்லாவிலுள்ள தமிழ் மக்கள் பெருவாரியாக வாழும் எல்லைப்புறப் பிரதேசம் தாய்த்தமிழகத்துடன் இணைய வேண்டுமென்ற அங்குள்ள தமிழ் மக்களின் நியாயமான கிளர்ச்சியை தமிழ் மக்கள் எல்லோரும் வரவேற்கிறார்கள்; ஆதரிக்கிறார்கள்.

இன்று துண்டுதுண்டாகப் பல ராஜ்யங்களில் சிதறிக்கிடக்கும் தமிழகத்தை உருட்டித்திரட்டி ஐக்ய தமிழகமாக்கப் போராடுவதென்றால் அதன் அர்த்தமென்ன? தமிழ் மக்களின் நாயகத்தில் தமிழ் ராஜ்யம் நிறுவப்போராடுகிறோமென்றால் அதன் பொருள் என்ன? இந்திய யூனியன் முழுவதிலும் மொழிவழி மாகாணங்கள் அமைக்கப் போராடுகிறோம் என்பதே. இந்தப் போராட்டம் என்? எதற்காக?

# ஆட்சியும் மக்களும்

முக்யப்பிரச்னை : இந்தப் பிரச்னையை அலசிப்பார்க்கும் பொருட்டு, ஆட்சி என்றால் என்ன? யார், எப்படி அதை நடத்த வேண்டும்? என்ற விஷயங்களில் நமக்கு ஒரு சரியான நிர்ணயிப்பு ஏற்பட்டாக வேண்டும். ஏனென்றால் ஜில்லா, தாலுகா, கிராமங்களைப் போலவே, மத்ய யூனியனைப் போலவே, ராஜ்யமும் ஆட்சி முறையில் ஒரு பகுதியாக இருக்கிறது.

"மக்கள் தாங்களாகவே ஆளும் ஆட்சி" என்றுபொருள்படுகிற ஜனநாயகம்தான் இன்றைய ஆட்சி முறையின் சத்தும் சாரமும் என்று கூறப்படுகிறது. அது அப்படித்தானா, அல்லவா என்பதை பற்றி முடிவுகட்ட நாம் இப்பொழுது ஒரு விவாத மன்றத்தில் நுழைய வேண்டிய தேவையில்லை. எனினும் விவாதத்திற்காக அப்படித்தானென்றால், அதை நடைமுறைக்குக் கொண்டுவர வழி வகை என்ன என்று சிறிது அலசிப் பார்ப்போம்.

இந்தியப் பாராளு மன்றம், மந்திரி சபை, சர்க்கார் அலுவலகம், இதர இலாகாக்கள்—ஆகியவை மத்தியில்; சட்டசபை, மந்திரிசபை, சர்க்கார் அலுவலகம், இதர இலாகாக்கள் ஆகியவை ராஜ்யங்களில்; கலெக்டர் முதலிய அதிகாரிகள், குறுகிய அதிகாரமுள்ள ஸ்தல ஸ்தாபனங்கள், மற்றும், ஜில்லாக்களிலும் தாலுகாக்களிலும் கிராமங்களிலுமுள்ள கீழ்த்தர அதிகாரிகள்—இதுதான் இன்றைய ஆட்சியின் ஒட்டு மொத்தக் கட்டுக்கோப்பாகக் காட்சி அளிக்கிறது.

இதே கட்டுக் கோப்பு முன்னர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மேலதிகாரத்திலிருந்தது. இன்று இந்திய அரசியல் சட்டத்தின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளு மன்றத்தின் மேலதிகாரத்தில் இருக்கிறது. தேர்தல் அடிப்படை முன்னைவிட விரிவாக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மை. அதன்படி 21 வயதுக்குமேற்பட்டவர்களுக்கு வாக்குரிமை அளித்து, சட்டசபைகளும் ஸ்தலஸ்தாபனங்களும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன என்பது உண்மை. முன்னைவிட புதிய சட்டசபைகளும், ஸ்தல ஸ்தாபனங்களும் உருவாகியிருக்கின்றன என்பதும் உண்மை. ஆனால், அன்றாட நடைமுறை ஆட்சியைப் பொறுத்தமட்டில் எத்தகைய மாறுதலும் கிடையாது. ஐ. ஏ. எஸ். அதிகாரிகள்மீதும், ஐ. சி. எஸ். அதிகாரிகள்மீதும் ஆளும் வர்க்கத்தினரான ஒரு சிறு கும்பலுக்குத்தான் பிடிப்பு உண்டுமேயன்றி பொது மக்களுக்கு எத்தகைய பிடிப்பும் கிடையாது. பிரிட்டிஷ் ஆளும் வர்க்கத்தார் படைத்தளித்த சிவிலியன் 'உருக்குச் சட்டைகளே' இந்திய அரசாங்கத்தின் முதுகெலும்பாக நிலைத்து நிற்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றி, உண்மை

யான முழுமையான ஜனநாயகம் நிலைநாட்டப்படவேண்டும். ஆட்சியின் அன்றாட நடைமுறையில், ஒவ்வொரு பிரச்னையிலும் அபிப்பிராயம் கூறவும், அந்த அபிப்பிராயத்தையொட்டி அன்றாட ஆட்சி நடக்கும்படி செய்யவும் பொதுமக்களுக்கு வாய்ப்பும் வசதியும் ஏற்படவேண்டும் — இதுதான் இன்று நமக்கு இன்றியமையாத் தேவை.

காந்தீயவாதிகளின் "சர்வோதய"த் திட்டமாக இருக்கட்டும்; பிரஜா-சோஷலிஸ்ட்களின் "சர்வோதய-சோஷலிஸ்ட்" திட்டமாக இருக்கட்டும், திராவிட இயக்கத்தாரின் "திராவிட பொது உடைமை"த் திட்டமாக இருக்கட்டும், கம்யூனிஸ்ட்களின் "மக்கள் ஜனநாயக"த் திட்டமாக இருக்கட்டும். மேற்படி கருத்தை ஒப்புக்கொண்டுதான் ஒவ்வொருவரும் தங்கள் திட்டத்தை முன்வைக்கிறார்கள்.

இந்தத் திட்டங்கள் ஒவ்வொன்றின் குறிக்கோளும் எப்படியிருந்தாலும், அவையாவும் பொதுவாக ஒப்புக்கொள்ளுகிற உண்மை ஒன்று இருக்கிறது. அதாவது, ஆட்சி உண்மையில் மக்களுடைய ஆட்சியாக மலர வேண்டுமென்று அவர்கள் எல்லோரும் சொல்கிறார்கள். இவ்வாறு ஒப்புக்கொள்கிற இந்தப் பொது உண்மை, நடைமுறையில் வரவேண்டுமென்றால், அரசாங்க நிர்வாகம் மக்கள் பேசிப் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில்தான் இருக்கவேண்டும். இதைக் காரிய சாத்தியமாக்க விரும்புகிற எவரும் மொழி ராஜ்ய அமைப்பு முதலிடம் பெறுகிறதென்ற உண்மையை ஒதுக்கித்தள்ளிவிட முடியாது.

## மொழிவழி ராஜ்யம் - ஜனநாயகத்தின் ஒரு முக்கிய படி

தமிழர்கள் ஆட்சி உரிமைபெற்ற ஒரு இனமாக மலர வேண்டுமானால்,

1. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் தங்களுடைய அதிகாரத்தை நிலைநிறுத்தும்பொருட்டு நம்மீது திணித்த ஆங்கில மொழியை அதிகார மொழி என்ற நிலையிலிருந்து விரட்டவேண்டும்;

2. ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியைக் கட்டாய ஆட்சி மொழியாக்கக் கைக்கொள்ளும் முயற்சியை எதிர்த்து முறியடிக்கவேண்டும். இந்திய யூனியனிலுள்ள பல்வேறு மொழிகளுக்கிடையில் பரஸ்பரம் சமத்துவம் நிலைநாட்டப்பட வேண்டும்;

3. இந்திய யூனியனின் பாராளுமன்றத்திலும் சர்க்கார் நடவடிக்கைகளிலும் தமிழ்மொழி மட்டும் தெரிந்தவர்களுக்கு, அந்த மொழியில் பேசவும் எழுதவும் உரிமை வேண்டும். தமிழில் பேசப்

படுவதை, எழுதப்படுவதை மொழிபெயர்த்து மற்ற மொழியினர்க்குத் தெரிவிக்கவும், மற்ற மொழியினர் பேசுவதை, எழுதுவதை தமிழில் பெயர்த்துத் தரவும் தகுந்த உரிமை அளிக்கப்படவேண்டும் ;

4. சட்டசபையிலும் சர்க்கார் அலுவலகத்திலும், நமது சர்க்கார் நிர்வாகத்தின் சகல துறைகளிலும் உபயோகிக்கப்படும் மொழி நமது தாய் மொழியாகிய தமிழாகவே இருக்கவேண்டும். இது நடைமுறையில் வரும்பொருட்டு, தமிழ்மக்கள் பெருவாரியாக வாழ்வதும், ஒட்டிக் கிடப்பதுமான பிரதேசங்களை உருட்டித்திரட்டி, ஐக்கிய தமிழகமாக்கி, ஒரு தனி ராஜ்யம் அமைக்கவேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தமிழகம் உருவானால் மட்டுமே 3 கோடி தமிழ் மக்களுக்கும் ஆட்சியின் சகல துறைகளிலும் பங்கெடுத்துக்கொள்வதற்கான வாய்ப்பும் வசதியும் ஏற்படும்.

இதனால்தான் ராஜ்ய உருவாக்கத்தில் மொழிக்கு முதல்பெரும் முக்கியத்துவம் உண்டென்று கூறுகிறோம். இதில் மொழிக்குரிய இந்த முதல்பெரும் முக்கியத்தன்மையை மறுப்பவர்கள் உண்மையில் என்ன செய்கிறார்கள் தெரியுமா? ஆட்சி முறையில் சர்வசாதாரணப் பொதுமக்களுக்கு இருக்கவேண்டிய முதற்பெரும் ஸ்தானத்தை மறுக்கிறார்கள்.

அதிகார பீடங்கள், அநியாயத்திற்குப் பொங்கலிட்டுப் பூசை போடும் ஆதிக்கக் குழுவின் செல்லப் பிள்ளைகளான ஒருசில மெத்தப் படித்தவர்களின் பாசறைகளாக இருக்கட்டும் ; சாதாரண மக்களுக்குப் புரியாத—தெரியாத அரசியல் தந்திர விளையாட்டுகள் நடைபெறும் இரகசியக் குகைகளாக இருக்கட்டும் என்று விரும்புகிறார்கள்.

# மொழிவழி ராஜ்ய விரோதிகள் யார்!

*மேலே கூறியது மிகைபடக் கூறியது என்று மறுப்பவர்கள் பின் வரும் உண்மைகளை கவனிக்கக் கோருகிறோம்!*

ஒன்று. மக்களாட்சியின் பரம வைரிகளான பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தினர், என்றும் எக்காலும் மொழிவழி ராஜ்யத்தின் ஜென்ம எதிரிகளாயிருந்தனர்.

இரண்டு. காங்கிரஸும் அதன் "ஜனநாயக" இயக்கமும், படித்த பிரகஸ்பதிகளான ஒரு சிறு கூட்டத்தினரின் ஏகபோக மிராசாயிருந்த காலத்தில், காங்கிரஸின் அதிகார மொழியாக ஆங்கிலம் ஆர்ப்பாட்டம் செய்தது. இந்த நிலைமை மாறி காங்கிரஸ் மக்களிடையில் பணியாற்றத் தொடங்கியபொழுதுதான் காந்திஜியின் தலைமையும் காங்கிரஸ் அங்கத்தினர் சந்தா-நாலணாவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட 1920-21ல் தான்—அதனுடைய அகில இந்திய மொழி இந்தி என்றும், மாகாண மொழிகள் மக்களுடைய மொழிகள் என்றும் ஏற்பட்டது அன்று தான், மொழிவழி அடிப்படை-யில் மாகாணக் காங்கிரஸ் கமிட்டிகள் அமைக்கப்பட வேண்டுமென்ற கொள்கையும் அங்கீகரிக்கப்பட்டது

மூன்று. காங்கிரஸ் மீண்டும் ஒரு சிறுகூட்டம் 'பெரிய மனிதர்'களின் ஸ்தாபனமாக உருக்குலைந்து, பொதுமக்களின் நலவுரிமைகளைப் பலிகொடுக்க தொடங்கியதும், அது மொழிவழி ராஜ்ய எதிர்ப்பு அணியில் இடம்பெற்று விட்டது.

## எங்கும்...... இங்கும்

மொழிவழி ராஜ்யக் கிளர்ச்சி அகில இந்தியாவிலும் இன்று படர்ந்து கிளர்ந்து நிற்கிறது. ஆந்திர மக்கள், வெற்றிகரமாகப் போராடிப் பெற்ற புதிய ராஜ்ய அமைப்பு, இந்த கிளர்ச்சியை ஜுவாலை விட்டெரியச் செய்கிறது. கன்னடியர்கள் சம்யுக்த கன்னடத்திற்கும், மலையாளிகள் ஐக்ய கேரளத்திற்கும், மராட்டியர்கள் ஐக்ய மகாராஷ்டிரத்திற்கும், குஜராத்தியர், மகாகுஜராத்திற்கும், பஞ்சாபியர், ஐக்ய பாஞ்சாலத்திற்கும் கிளர்ச்சி நடத்துகிறார்கள். மொழி ராஜ்யக் கிளர்ச்சி திரு-கொச்சியிலிருந்து இமாசலப் பிரதேசங்கள் வரையில் படர்ந்து நின்று கொழுந்துவிட்டெரிகிறது. புதிய ராஜ்யம் கண்ட ஆந்திரர்கள் புத்துயிரோடும், புதுவேகத்தோடும் விசால ஆந்திரக் கோரிக்கையில் மென்மேலும் உயிரைச் சூடுகிறார்கள். ஆஸாம்-வங்கம் எல்லைத் தகராறு, வங்கம்-பீகார் எல்லைத் தகராறு, ஒரியா—ஆந்திர எல்லைத் தகராறு இவற்றிலெல்லாம் மொழிவழித் தன்மையே முதலிடம் பெறுகிறது.

தமிழர்கள் இதற்கு விதிவிலக்கல்ல. பாரம்பரையும் பண்பாடும் வளமும் வலிவுமுள்ள தமிழ்மொழி, ஆட்சியிலும் நிர்வாகத்திலும், வாழ்வின் சகல முறைகளிலும் அரசு வீற்றிருக்க வேண்டுமென்று தணியாத்தாகம் கொண்டு துடிக்கின்றனர். தமிழ் மக்கள் எல்லோரும் இந்த வேட்கையால் விழுங்கப்பட்டு நிற்கின்றனர். அதனுல்தான், திரு-தமிழக மக்களும், காரை, பாண்டி மக்களும் சித்தூர் எல்லைப் புறத் தமிழனும் தாய்த் தமிழகத்துடன் இணைந்து தமிழ்மொழி ஆட்சியை நிலைநாட்டக் கோருகின்றனர்.

## ஐக்ய தமிழகம்—மக்கள் கோரிக்கை

இந்த கோரிக்கை, ஒரு சில படித்த அறிவாளிகளின் கற்பனையில் உதித்ததல்ல, தமிழ்ப் பித்தர்களின் ஆவேசக் கூச்சலுமல்ல. அரசியல் சூதாட்டக்காரர்களின் வாண வேடிக்கையுமல்ல. நாட்டைப் பிளவுபடுத்தும் நாசகாரிகளின் சதித் திட்டமுமல்ல. தமிழ் மக்களிடம் பன்னெடுங் காலமாக உருவாகி, இன்று 3 கோடி தமிழர்களின் தன்னுணர்வில் உறுதிப்பட்டு நிற்கும் கோரிக்கை இது. எப்படி?

சங்ககாலத்தில், தமிழகம், தென்பாண்டிநாடு, வேணுடு, குடநாடு, குட்டநாடு, பூழிநாடு, பாண்டிநாடு, புனல்நாடு, பன்றிநாடு, அருவாநாடு, மலாடு இவ்வாறு பற்பல நாடுகளாகப் பிரிந்துகிடந்தது என்று தெரிகிறது. அப்பாலும், சாதாரணமாக தமிழ்மக்கள் அறிந்திருப்பதுபோல், சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு, கொங்குநாடு, தொண்டைநாடு என்று தமிழ்நாடு பிரிந்துகிடந்தது. மூவேந்தர் ஆண்ட நாடுகளிலும் ஒவ்வொரு நாடும் பல உபநாடுகளாகப் பிரிந்து கிடந்தது என்றும் அறிகிறோம். பண்டு மன்னர்கள் மாறிமாறி நாடுகளைப் பிடித்து அடக்கி ஆண்டார்கள். இலக்கண நூல் வல்லார்களும், கவிஞர்களும் தங்கள் தங்கள் அறிவுத் தரத்திற்கும் அனுபவத் திறத்திற்கும் தக்கபடி நாடுகளை வரையறுத்துக் கூறினர்; பாடினர்.

தமிழ்மக்கள் வாழும் நிலப்பரப்பு முழுதும் ஒரே நாடாக என்றும் விளங்கியதுமில்லை; ஒருகுடை நிழலில் என்றும் இருந்ததுமில்லை.

கடைசியாக பிரிட்டிஷார் இங்குவந்து நிலைமை தலைகீழ் மாறுதல் அடைய ஆரம்பித்தது.

ரயில்வே போக்குவரத்து ஏற்பட்டது. புதிய யந்திரத் தொழில்கள் தோன்றத் தொடங்கின. நாஞ்சில்நாடும் தொண்டைநாடும் அண்டை அயல் ஊர்கள் மாதிரி உலக விவகாரத்தில் ஈடுபட வாய்ப்புக் கிடைத்தது. நாகப்பட்டணத்தானும் பொள்ளாச்சிக்காரனும் ஒரே வாணிபத்தில், ஒரே தொழிலில் ஈடுபட சந்தர்ப்பமும் தேவையும் பிறந்தன. சாதி, மதத் தடைகள் தகர்ந்தன. எந்த மன்னர் மரபு அஸ்தமித்தாலும், எந்த சாம்ராஜ்யம் உடைந்து சுக்குநூருனுலும் அன்றிருந்த மேனி அழியாது, காலகாலமாக ஆட்சி செலுத்திவந்த

கிராமப் பொருளாதாரம் உடைந்து நொறுங்கிவந்தது. இதுவரை இல்லாதிருந்த 'தமிழ்நாடு' என்ற அன்பும், ஒரு புதிய தேசிய இன உணர்ச்சியும் மெள்ள மெள்ள உருவாகத் தலைப்பட்டன.

மேல்நாட்டுக் கல்வி அறிவு நம் நாட்டில் பரவத் தொடங்கிற்று. நவீன, அரசியல், பொருளாதார, சமுதாயக் கருத்துக்கள் நமது நாட்டில் வேர் ஊன்றத் தொடங்கின. 19ம் நூற்றாண்டின் இறுதியிலேயே சுயாட்சிக் கிளர்ச்சி, சுதேசிக் கிளர்ச்சி, சீர்திருத்தக் கிளர்ச்சி, தாய்மொழிக் கிளர்ச்சி முதலாதிக் கிளர்ச்சிகள் குருத்துவிட்டுத் தழைக்கத் துவங்கின. 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து தேசிய உணர்ச்சி வெகுவேகமாகப் பொதுமக்களிடையில் பரவலாயிற்று. முதலாவது உலக யுத்த காலத்திலிருந்தே தேச விடுதலையின்பொருட்டும், நல்வாழ்வின் பொருட்டும் பிரிட்டிஷ் ஏகாதிபத்ய எதிர்ப்புப் போராட்டங்களும் வர்க்கப் போராட்டங்களும் தொடர்ச்சியாக வெடித்துக் கிளம்பின. இவற்றில் கோடானுகோடி மக்கள் வசீகரிக்கப்பட்ட "நான் தமிழன்; இந்தியன்", "எனது நாடு தமிழ்நாடு; பாரதநாடு" என்ற உணர்ச்சி ஆர்த்தெழுந்தது.

இந்தக் காலம்தான் மக்கள் கவியாகிய பாரதியின் காலம். தேசிய இயக்கத்தில், ஏகாதிபத்ய எதிர்ப்புப் போராட்டத்தில், விடுதலை வேள்வியில் குதித்துக்கொண்டிருந்த தமிழ் பெருமக்கள், புதிய ஜீவனோடு, தமிழ், தமிழர், தமிழ்நாடு என்ற உணர்ச்சிகளுக்கு ஜனநாயகக் குரல் கொடுத்தனர். பாரதி கவிதாவிலாசத்தோடு இதை எதிரொலித்தான்.

கவியரசனான பாரதி "சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே" என்றும் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்றும் பாடினான். "வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்! வாழிய பாரத மணித்திருநாடு!" என்று புத்தமிழையும், புதிய தமிழினத்தையும், பொன்னான இந்திய ஐக்யத்தையும் வாயார வாழ்த்தினான். செந்தமிழ்நாடு, "எங்கள் தந்தையர்நாடு" என்றும், "தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடு" என்றும் தேசபக்தி கடல்மடை திறந்து பாய முழங்கினான்.

"நாமிருக்கும் நாடு நமதென்ப தறிந்தோம்—இது நமக்கே உரிமையா மென்ப தறிந்தோம்" என்ற "சுதந்திரப் பள்ளில்", புதிய தமிழினத்தின் உறுதியான குரல் 'கணீ'ரென்று கேட்டது; புதிய தமிழகத்தின் எல்லைக் கோடுகள் தெளிவாகக் காட்சியளித்தன.

பாரதி காலத்திற்குப் பின்னால் இன்று வரைக்கும் ஐக்ய தமிழகத்தை உருவாக்கும் அறப்போர் மேலும் மேலும் அகலும் நீளமும் ஆழமும் பெற்று வளர்ந்துகொண்டே வருகிறது. பாரதி பரம்பரையில் வந்த புலவர்களும் இந்த உருவாக்கத்தை தங்கள் கவிதைப் படுதாவில் சித்திரித்துக் காட்டி வருகிறார்கள். தமிழனுக்கு உயிரூக்கம் ஊட்டி வருகிறார்கள்.

"தமிழனென்று சொல்லடா!
தலைநிமிர்ந்து நில்லடா!"—என்று

சுவாமி சுத்தானந்த பாரதியார், தமிழனின் இன உணர்ச்சியைத் தட்டியெழுப்புகிறார். காந்திய, காங்கிரஸ் கவிஞரான இராமலிங்கம் பிள்ளையும்,

"தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவற்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடை வழியாகும்"—என்று

"தமிழனின் இதயத்தை" திறந்து காட்டி, தமிழினத்தின் தனிக் குணத்தையும் தனிச் சிறப்பையும் நிர்ணயித்துப் போற்றுகிறார்.

பாரதியின் நேர் மாணவர் பாரதிதாசனோ,

"தமிழனுக்கு வீழ்ச்சியில்லை; தமிழன் கீர்த்தி
தாழ்வதில்லை! தமிழ்நாடு, தமிழ் மக்கள்
தமிழ் என்னும் பேருணர்ச்சி இந்நாள் போலே
தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்ததில்லை"—என்று

பாடி, தமிழ்நாட்டின் யதார்த்தச் சூழ்நிலையை அற்புதமாகத் தீட்டிக் காட்டுகிறார்.

அண்மையில், "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற கோஷத்தையும் "தமிழ் ராஜ்யம்", "தமிழரசு" என்ற கோரிக்கையையும் பற்பல கட்சிக் காரர்களும், சகல பகுதி மக்களும் தமிழகத்தில் முழக்கி வந்திருக்கிறார்கள்; வருகிறார்கள். ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல், ஐக்ய தமிழக உருவசப் போராட்டம் இன்று தமிழ்ப் பெரு மக்களால், 'தமிழ் கூறும் நல்லுலக' முழுவதிலும் வளரும் ஆற்றலோடு நடைபெற்று வருகிறது.

தமிழ் மக்களின் ஆழ்ந்த விருப்பம், தமிழர்கள் ஒன்றுபட்டு—சிதறிக் கிடக்கும் தமிழகம் ஒருருவாகி—ஒரே ஆட்சியின்கீழ் வர வேண்டுமென்பதே. இந்தக் கோரிக்கைதான் இன்று 3 கோடித் தமிழர்களின் இதய கீதம். அதனால்தான் இந்தப் பிரத்யட்ச நிலைமையைப் பிரதிபலிக்கும் விதத்தில் கம்யூனிஸ்ட் கட்சி மொழிவழி ராஜ்யம் கோருகிறது; ஐக்ய தமிழகம் கோருகிறது. கம்யூனிஸ்ட் கட்சி மக்கள் கட்சி. எனவே, தமிழ் மக்களின் ஜனநாயக எழுச்சியின் இன்றைய வளர்ச்சியின் எல்லையாகத் திகழும் "ஐக்ய தமிழக" லட்சியக் கோரிக்கையை கம்யூனிஸ்ட் கட்சி தனது கோரிக்கையாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.

## காங்கிரஸ் தலைமையில் இந்திய ஐக்கியம்

மொழிவழி ராஜ்யங்கள் அமைவது இந்திய ஐக்யத்திற்குக் குந்தகம் விளைக்கும் என்கின்றனர் பண்டித நேரு, ராஜாஜி, காமராஜர்

போன்ற காங்கிரஸ் தலைவர்கள். மொழிவழி ராஜ்யக் கிளர்ச்சிகளில் காங்கிரஸ்காரர்கள் பங்குகொள்ளக் கூடாதென்று பண்டித நேரு தடைவிதிக்கிறார்.

நேருவின் ஆணை,—இந்திய ஐக்கியத்தின் பேரால் மொழி ராஜ்ய அமைப்புக் கூடாதென்பது சரித்திர பூர்வமான தாயக வளர்ச்சிக்கும், தேசீய பாரம்பரைக்கும், இயற்கைக்கும் விரோதமாக இருக்கிறது; இந்தியாவிலுள்ள மக்களை 'பிரித்து—ஆளுவதற்கு' பிரிட்டிஷ் ஏகாதிபத்ய வாதிகள் வகுத்த இயற்கை விரோதமான மாகாண அமைப்புகளை அப்படியே கட்டிக் காத்து, இந்திய ஐக்கியத்தை நிலை நாட்ட முடியுமென்று சொல்கிறது. 1929-லேயே பண்டித மோதிலாலை தலைவராகவும் பண்டித ஜவஹர்லாலை செயலாளராகவும் கொண்டு நிறுவப்பட்ட சாவ கட்சி கமிட்டி தயாரித்த ரிப்போர்ட் சிபார்சு செய்த மொழிவழி ராஜ்ய அமைப்புகளை, இந்த ஆணை மறுக்கிறது. தேச விடுதலை இயக்கத்தில், இந்தியாவிலுள்ள பல்வேறு இன மக்கள் உருவாக்கி வந்திருக்கிற மொழிவாரி ராஜ்ய ஜனநாயகக் கோரிக்கையை நேருவின் ஆணை புறக்கணிக்கிறது. எனவே நேருவால், மேற்படி காங்கிரஸ் தலைவர்கள் மொழிவழி மாகாணக் கிளர்ச்சியில் ஈடுபடுவதைத் தடுக்க முடியவில்லை. தடுக்கவும் முடியாது.

நடப்பது என்ன? பெரும் பெரும் காங்கிரஸ் தலைவர்களே மொழிவழி ராஜ்யக் கிளர்ச்சியில் அந்தந்த ராஜ்யங்களில் முன்னணியில் நிற்கிறார்கள். சஞ்சீவி ரெட்டி தலைமையில் ஆந்திர மாகாணக் காங்கிரஸ் கமிட்டி, புதிய ஆந்திர ராஜ்யம் துவங்கிய அன்றே, விசால ஆந்திரக் கோரிக்கையை வலியுறுத்திற்று. நேரு அன்பரும் ஹைதராபாத் காங்கிரஸ் தலைவருமான சுவாமி இராமானந்த தீர்த்தா, ஹைதராபாத்தை உடைத்து, விசால ஆந்திரம், சம்யுக்த கன்னடம், ஐக்கிய மகாராஷ்டிரம் ஆகிய மொழி ராஜ்யங்கள் அமைக்க வேண்டுமென்று கோருகிறார். மகாராஷ்டிர காங்கிரஸ் தலைவரான என். வி. காட்கிலும், குஜராத் காங்கிரஸ் தலைவரான சாந்துலால் தேசாயும், கன்னட காங்கிரஸ் தலைவரான நிஜலிங்கப்பாவும் இவர்கள் போன்றோரும், மொழி ராஜ்யக் கிளர்ச்சியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

மொழிவழி ராஜ்யம் ஏற்படாவிட்டால் என்ன நேரிடும்? நீடித்து வந்துள்ள பிரிட்டிஷ் ஆட்சியின் அமைப்பு இன்னும் நீடிக்கும். விளைவு என்ன? பிரிட்டிஷார் வகுத்த மாகாண அமைப்பால், பல்வேறு இன மக்களிடையே மனக் கசப்பும் துவேஷமும் மலிந்து வளர்ந்தது தான் இந்திய சரித்திரம் கண்ட அனுபவம். ஆகவே, பிரிட்டிஷ் அமைப்பின் அடிப்படையிலுள்ள இன்றைய மத்திய ஆட்சியும், ஒற்றுமையின் சின்னமாக ஒரு நாளும் இருக்க முடியாது. மக்களின் விருப்பத்திற்கு விரோதமாக எரிச்சலும், புகைச்சலும் நிறைந்த வலுக்கட்டாய ஆட்சியாகவே இருக்கும். எனவே, மொழி ராஜ்ய அமைப்

புக்கு இடங்கொடாத, காங்கிரஸ் தலைமை உபதேசிக்கும் ஒற்றுமை, போலி ஒற்றுமையே.

இவ்வித ஒற்றுமை, மக்களின் இதயத் துடிப்புக்கு நேர் விரோதமாகும். ஏன்? இன்று, இந்திய யூனியனை, ஒரே மொழி பேசி, ஒரே கலை, கலாச்சார, பண்பாடுகளுடைய ஒரே இன மக்கள் வாழுகிற நாடென்று யாரும் சொல்லமாட்டார்கள். இந்திய யூனியனிலுள்ள மக்களிடையில் பல பொதுவான கலை, கலாச்சார அம்சங்கள் இருந்த போதிலும், வங்காளி மக்களுக்கு பிரத்தியேகமான குணம்சங்களுண்டு, அதுபோல் பாஞ்சாலத்தார் நடையுடைபாவனைகள் குஜராத்தியரைப் போன்றதல்ல. அதுமாதிரி, தமிழர், மலையாளிகள், ஆந்திரர், கன்னடியர், ஆகிய மொழிவழி மக்களிடையிலும் தனித்தனிக் குண வேறுபாடுகள் உண்டு. தமக்கே சிறப்பாக பல குணம்சங்கள் வாய்க்கப்பெற்றுள்ள தமிழ் மக்கள், தமிழ்த்தாயகம் ஒருருவாகி, பொலிவும் வலிவும்பெறும் நன்னாளை எதிர்பார்க்கின்றனர். சென்னை ராஜ்யத் தமிழராயினும், திரு கொச்சி ராஜ்யத் தமிழராயினும், பிரஞ்சிந்தியத் தமிழராயினும், இன்று, தமிழர் அனைவரும் ஒன்றுபட்டு ஒரே ஆட்சியின்கீழ் வாழவிரும்புகின்றனர். இவ்வாறு ஒவ்வொரு மக்களும் அவரவர் மொழி ராஜ்யத்தை விரும்புகின்றனர்.

மொழிவழி ராஜ்யங்கள் இஷ்டபூர்வமாக இணைவதில் மலரும் இந்திய ஒற்றுமைதான் வலிமை மிக்கதும் ஒருவருக்கொருவர் குரோதமற்றதும் நிரந்தரமானதுமான ஒற்றுமையாக இருக்கமுடியுமே யொழிய இன்றைய ராஜ்யங்களின் அமைப்பு முறையால் ஏற்படும் போலி ஒற்றுமையாலல்ல. எனினும் மறுக்க முடியாத, மறுக்கக் கூடாத இந்த சரித்திர உண்மையை, பிரத்தியட்ச நிலைமையை ஏற்க மறுக்கிறது நேரு ஆட்சி. அதன் பலனாக, அது தோல்விமேல் தோல்வி அடைந்து வருகிறது.

## "திராவிட நாடு"—ஒரு கற்பனை கோஷம்

ஐக்ய கேரளம், ஐக்ய தமிழகம், விசால ஆந்திரம், சம்யுக்த கன்னடம், ஐக்ய மகாராஷ்டிரம், மகாகூர்ஜரம், ஐக்ய பாஞ்சாலம் என்று, குமரி முதல் இமயம் வரை மொழி ராஜ்யக் கிளர்ச்சி நடப்பதே இன்றைய யதார்த்த நிலைமை. இந்த கிளர்ச்சி எதைக் காட்டுகிறது? இந்தியாவில் மொழிவழியில் புதிதாக உருவாகியுள்ள **தேசீய இனங்கள்** சிதறிக்கிடக்கும் தங்கள் தாயகங்களை முறையாகச் சீரமைத்துக் கொள்ளும்பொருட்டு, சிதறுண்ட நிலையே சீரான நிலை எனக்கூறுவோரை எதிர்த்துப் போராடுகின்றன என்பதையே காட்டுகிறது. இந்த மொழி ராஜ்ய ஜனநாயகக் கிளர்ச்சியில், தென்னிந்தியாவிலும் சரி, வட இந்தியாவிலும் சரி, எங்கும் "திராவிட—ஆரிய இன"ப் பேச்சு எழுந்ததில்லை; ழவில்லை.

பொதுவான மொழி, பொதுவான நிலப்பரப்பு, பொதுவான பொருளாதார வாழ்வு, பொதுவான கலை, கலாச்சாரப் பண்பாடுகளுடையதும் சரித்திர பூர்வமாகப் பரிணமித்ததுமான நிலையான சமுதாயத்தையே தேசீய இனம் என்று நவீன சமுதாய விஞ்ஞானிகள் வரையறுத்துக்கூறுகிறார்கள். இத்தகைய தேசீய இனங்கள் (Nationalities) அல்லது மொழிவழி இனங்கள்தான் இன்றிருக்கின்றன. வருண வழி இனங்கள் (Races) இன்றில்லை.

இன்று திராவிடர் என்று ஓர் இனத்தாரில்லை. தமிழர், ஆந்திரர், கன்னடியர், கேரளீயர் (மலையாளிகள்) போன்ற தேசீய இனத்தார்கள்தான் இருக்கின்றனர். இன்று ஆரியர் என்று ஓர் இனத்தாரில்லை. மராட்டியர், குஜராத்தியர், பாஞ்சாலத்தார், இந்துஸ்தானியர், இராஜஸ்தானியர், பீகாரியர், வங்காளியர், ஆஸாமியர், ஒரியர் போன்ற தேசீய இனத்தார்கள்தான் இருக்கிறார்கள்.

"திராவிடநாடு" கோஷமோ, சரித்திரத்தில் மங்கி மறைந்து போன ஒரு புராதன மூலக் குழுவை ஜீவாதாரமாகக் கொள்ள கால வெள்ளத்தில் பிடிவாதமாக எதிர் நீச்சல் நீந்துகிறது. அதே பொழுதில், இந்த ஜனநாயக சகாப்தத்தில் கண்கூடாக மலைபோல் வளர்ந்து நிற்கும் தேசீய இனங்களை ஏற்க மறுக்கிறது.

எனவே, "திராவிட நாடு" யதார்த்தத்தில் இல்லாத ஒரு கற்பனை கோஷம்.

1938ல் நீதிக்கட்சித் தலைவர்களாக இருந்த இன்றைய திராவிட இயக்கத் தலைவர்கள், "தமிழ்நாடு தமிழருக்கே" என்று முழக்கினர். 1944லிருந்து "திராவிடநாடு திராவிடருக்கே" என்று முழக்குகிறார்கள். 38-வது வருஷத்திய "தமிழ்நாடு" 44-லிலிருந்து "திராவிடநாடு" ஆகவேண்டிய வகையில், யதார்த்தச் சூழ்நிலையில் என்ன மாறுதல் ஏற்பட்டிருக்கிறது? ஒன்றுமில்லை.

"ஜின்னா பாகிஸ்தான் கேட்டார்—கிடைத்தது. நாங்கள் திராவிடஸ்தான் கேட்கிறோம்—கிடைக்கும்" என்கிறார்கள். 3 கோடி ஆந்திரர்கள் சென்ற 40 ஆண்டுகளாக விசால ஆந்திரத்தை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள்; அதுபோல், தமிழர்களும், கன்னடியர்களும், மலையாளிகளும் முறையே ஐக்கிய தமிழகத்தையும், சம்யுக்த கன்னடத்தையும், ஐக்கிய கேரளத்தையும் உருவாக்கிக்கொண்டிருக்கின்றனர். இந்த உலகறிந்த உண்மையை, திராவிட இயக்கத் தலைமை கணக்கிலெடுக்கத் தயாராயில்லை. இந்த மொழி ராஜ்யக் கோரிக்கைகள் சரித்திரபூர்வமாக உருவாகி வருவதையும் அவர்கள் மதிக்கத் தயாராயில்லை. ஜின்னாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, பாகிஸ்தான் பாதையில் "திராவிடநாடு" பெற வழிகோலுகிறார்கள்.

"திராவிடநாடு" கோஷம், சரித்திர வளர்ச்சியை, யதார்த்தச் சூழ்நிலையை, மக்கள் தேவையை மதிப்பிட்டு ஏற்க மறுக்கிறது. இந்த

கோஷம், தி. க., தி. மு. க. தலைவர்களின் கற்பனையிலிருந்து உதித்த கோஷமே தவிர, மூன்று கோடித் தமிழர்களின் அல்லது 10 கோடி தென்னிந்தியர்களின் நடைமுறை வாழ்வில் உருவாகியதல்ல. எனவே, "திராவிடநாடு" கோஷத்தை கம்யூனிஸ்ட் கட்சி ஏற்க வில்லை.

மற்றப்படி, "கம்யூனிஸ்ட் கட்சி விரும்பவில்லை, அதனாலேயே திராவிட நாடு கோஷத்தை அது ஏற்க மறுக்கிறது" என்பது சரியு மல்ல. ஏனென்றால் கம்யூனிஸ்ட்கட்சியின் விருப்பு, வெறுப்பிற்கு இதில் இடமில்லை.

நித்திய நிகழ்ச்சிகள் "திராவிடநாடு" கோஷத்தை உறுதிப் படுத்தவில்லை. புதிய ஆந்திர ராஜ்யத்தின் பிறப்பு எதைக் காட்டு கிறது? ஐக்கிய கேரளம், சம்யுக்த கன்னடம் என கேரள, கன்னட மக்கள் தனி ராஜ்யங்கள் அமைக்கக் கோருவதன் அர்த்தமென்ன? "திராவிடநாடு" கோரிக்கைச்கும் பிரத்தியட்ச நிலைமைக்கும் வெகு தூரம் என்பதே. நம்நாட்டு மக்களின் நடைமுறை வாழ்விலிருந்து அது தோன்றியதல்ல என்பதே.

"திராவிடநாடு"—"வல்லான் வகுத்ததே வாய்க்கால்" என்ற கொள்கையை அடிப்படையாகக்கொண்ட கோஷம். இந்தக் கோஷம், சரித்திரத்தை உருவாக்குவதில் மக்களுக்குள்ள முதற்பெரும் பங்கை மறுக்கிறது. பெரியார்களும், அறிஞர்களும் சர்வ வல்லமையுடைய வர்களென்று நிர்ணயிக்கிறது. "அடிக்கிற காற்றுக்கு ஆடுகிற நாணற் புல்" மாதிரி மக்களை மதித்து, அவர்களை எப்படி வேண்டுமாயினும் ஆட்டிப்படைக்கலாமென்று கருதுகிறது. இதன் விளைவாக, இதர மக்கள் கட்சிகளையும், இதர மொழிவழி மக்களையும், அவர்களுக்குரிய உரிமைகளையும் மதிக்கத்தவறுகிறது.

## "திராவிடநாடு"—ஒரு பிரிவினை கோஷம்

திராவிட இயக்கத்தார், இந்திய யூனியனிலிருந்து "திராவிட நாடு", ஒட்டும் உறவுமின்றிக் கத்தரித்துக்கொள்ளவேண்டுமென் கின்றனர். 'டில்லியிலிருந்து பிரிவதுதான் சர்வரோக நிவாரணி' என்பது அவர்களின் தாரக மந்திரம். ஜனநாயக உணர்ச்சியும் முன் னேற்ற ஆர்வமும் உலகில் அதிகரிக்க அதிகரிக்க, மக்களும் நாடுகளும் உலகக் கூட்டுறவையே மென்மேலும் நாடுகிறார்கள். இதுதான் ஜன நாயக உலகத்தின் வளர்ந்துவரும் போக்கு. இதற்கு நேர் எதிரிடை யான போக்கை "திராவிடநாடு" பிரிவினை கோஷம் எதிரொலிக் கிறது. ஆகவே இந்தப் பிரிவினைப்போக்கு, பிற்போக்குத் தன்மை வாய்ந்தது.

சென்ற இரண்டு தலைமுறைகளாக ஏகாதிபத்ய எதிர்ப்பு—நாட்டு விடுதலைப் போராட்டங்களிலும் சரி, நல்வாழ்வுக்காக நடை—

பெற்ற வர்க்கப்போராட்டங்களிலும் சரி, இந்தியாவிலுள்ள பல்வேறு இனமக்களும், ஒருவரை ஒருவர் தழுவிநின்று, ஒன்றுபட்டே போராடி வந்திருக்கிறார்கள். ஒருவரை ஒருவர் என்றும் காட்டிக்கொடுத்த தில்லை. இதில், ஆரியன்-திராவிடன், வடநாட்டான்-தென்னாட்டான் என்ற பேத உணர்ச்சி முன்னணிக்கு வந்ததேயில்லை. இன்றும் நேரு ஆட்சியின் பிற்போக்கை முறியடித்து மக்கள் ஜனநாயகத்தை நிலைநாட்ட, ஒன்றுபட்டே போராடுகிறார்கள். மொழிராஜ்யக் கிளர்ச்சி வெற்றிபெறும்பொருட்டு, நேரு ஆட்சியின் முட்டுக்கட்டையை எதிர்த்து முறியடிக்கப் பல்வேறு இனமக்களும் ஒன்றுபட்டே போராடுகிறார்கள்.

ஆகவே, மொழிராஜ்யவாதிகள் இந்திய யூனியனிலிருந்து பிரிந்து தனித்துப்போக விரும்பினதுமில்லை; விரும்பவுமில்லை. ஏனென்றால் மொழிராஜ்யக் கோரிக்கை இந்தியக் கூட்டாட்சியில் அழிவை அல்ல ஆக்கத்தை, பலவீனத்தையல்ல பலத்தைக் காண்கிறது.

"திராவிடநாடு" கோரிக்கை, இந்திய யூனியனிலிருந்து பிரிந்து போவதில்தான், ஆக்கத்தை, வலுவைக் காண்கிறது. காரணம், அது ஜனநாயக சக்திகளிடையில் இந்தியாவில் சரித்திரபூர்வமாக வளர்ந்து வரும் ஒற்றுமையைப் பார்க்க மறுக்கிறது. மக்களுடைய கூட்டுப் போராட்டத்தின் இறுதிவெற்றியில் நம்பிக்கைவைக்க மறுக்கிறது. எனவே மொழிராஜ்யக் கிளர்ச்சியின் வெற்றியும், பிற்போக்கு நேரு ஆட்சி ஒழிந்து மொழிராஜ்யங்கள் தன்னிச்சையாக இணைந்து மலரப் போகும் மக்கள் ஜனநாயக இந்தியக் கூட்டாட்சியின் வெற்றியும் சர்வநிச்சயமென்பதையும் தொலைநோக்குடன் பார்க்க மறுக்கிறது.

ஆகவே முற்போக்கு கோஷத்தோடு பிற்போக்கு கோஷத்தையும் போட்டு, குழப்பவேண்டியது திராவிடத் தலைமைக்கு தவிர்க்க முடியாததாகிவிட்டது. ஒருபுறத்தில், ஸ்டாலினையும், மா-சே-துங்கையும் வானத்தில் தூக்கிவைத்துப் புகழுவதும், சோவியத் யூனியனையும் மக்கள் சீனத்தையும் அவற்றின் அரும்பெறல் பேறுகளையும் வாயாரப் பாராட்டுவதும் மறுபுறத்தில், ஜின்னாவின் பாதையில் சென்று திராவிடநாடு பெறுவோமென்று வீரமுழக்கம்புரிவதும், பர்மா பிரிவினையை, பாகிஸ்தான் பிரிவினையை திரும்பிப்பார் என்பதும் அவர்களுடைய போர்த் தந்திரத்தின் கணிசமான அம்சமாக உருவாகி இருக்கிறது.

விசால ஆந்திரம், ஐக்கிய கேரளம் அமைப்பு என்பது, இந்தியக் கூட்டாட்சியிலிருந்து பிரிந்து போகும் பிற்போக்குப் பிரிவினை நோக்கம் உடையதல்ல; ஒவ்வொரு இன வளர்ச்சிக்கும் உத்தரவாதமளித்து சகல இனங்களும் நேசப் பாங்குடன் ஒரு குடும்பமாக வாழ அடிகோலும் தன்மை வாய்ந்தது. பிரிட்டிஷார் அமைத்த மாகாணங்

களையும் சமஸ்தானங்களையும் உடைத்து, மெய்யான இந்திய ஒற்றுமை நிலைநாட்டும் மொழிவழி ராஜ்யங்களின் சீரமைப்பே அது. "திராவிட"ப் பிரிவினைக் கிளர்ச்சி பல்வேறு இன மக்களின் வளர்ச்சியையும், ஆட்சி உரிமையையும் மறுப்பதோடு, இனங்களுக்கிடையே உண்மையான ஒற்றுமை வளர வொட்டாமல் வேற்றுமையை வளர்க்கவே உதவுகிறது. எனவே திராவிடப் பிரிவினைக்கும் மொழிவழி ராஜ்யப் பிரிவினைக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை.

## "மொழிவழிப் பிரிதல் -- இனவழிச் சேர்தல்"

அண்மையில் இவ்வாறு ஒரு வரையறுப்புக் கொடுத்து வருகிறார்கள். தி. மு. க. தலைவர்கள், இதன் பொருள் என்ன? ஐக்கிய தமிழகம், ஐக்கிய கேரளம், விசால ஆந்திரம், சம்யுக்த கன்னடம் என்று மொழிவாரி ராஜ்யங்கள் பிரியட்டும். ஆனால், இந்த நான்கும் 'திராவிட இன' அடிப்படையில் 'திராவிட'க் கூட்டாட்சியாக இணைந்து நிற்க வேண்டும். இந்தியக் கூட்டாட்சியில் இணையக் கூடாது" என்பதே.

தி. மு. க. மொழி ராஜ்ய அமைப்பை அங்கீகரிப்பதை நாம் வரவேற்கிறோம். மற்ற அம்சம், "பழைய கருப்பன் கருப்பனே" என்ற கதை தான் என்று சொல்லாதிருக்க முடியவில்லை. இந்த நிலை, தி. மு. க. மொழி ராஜ்ய வாதிகளோடு சமரஸம் செய்து கொள்வதைக் காட்டுகிறது. "திராவிட நாடு" கோரிக்கையிலிருந்து மொழிராஜ்யக் கோரிக்கைக்கு, தடுக்க முடியாதபடியும் தவிர்க்க முடியாதபடியும் இறங்கி வந்திருக்கிறதென்பதையே குறிக்கிறது. ஆனால் மொழி ராஜ்ய வாதிகள் ஏற்கும் இந்தியக் கூட்டாட்சியை ஏற்க மறுக்கிறார்கள்; "திராவிடக் கூட்டாட்சி" ஆக்க விரும்புகிறார்கள்.

அன்று "ஓர் இனம் ஒரு ராஜ்யம்" என்றவர்கள், இன்று "ஓர் இனம் நான்கு ராஜ்யங்கள்" என்று கூறத் தலைப்பட்டுள்ளனர். இந்தக் குழப்படி, மொழி ராஜ்ய உருவாக்கத்தின் சரித்திர யதார்த்தத்தை அவர்கள் மறுக்க முடியாதபடி அங்கீகரித்த போதிலும், 'திராவிட இனம்' 'திராவிட நாடு' என்ற கற்பனையில் அவர்கள் பெருமையுடன் கொண்டுள்ள பிடிப்பின் விளைவு தான் என்பதை நாம் நிதானமாக உணர வேண்டும்.

## இலக்கியச் சான்றுகள்

"திராவிட நாடு" கோஷத்தை நியாயப்படுத்த பழைய இலக்கியங்களிலிருந்து சான்றுக் காட்டப்படுகிறது. பழைமையான தமிழ் இலக்கியம் எதிலாவது தமிழனை, 'திராவிடன்' என்று குறிப்பிட்டி

ருக்கிறதா? "திராவிடன்" என்ற சொல் தமிழ் சொல்லுமல்ல; பழைய இலக்கியம் எதிலும் அது காணப்படவுமில்லை. ஆகவே தொல்காப்பியம், புறநானூறு போன்ற சங்க நூல்கள், திருக்குறள் போன்ற பழந்தமிழ் இலக்கியங்களில் பயிலப்படும், சிறந்த பழக்க வழக்கங்கள், அருமந்தன்ன சாதனைகள், உயர்ந்த ஒழுக்கங்கள் ஆகியவற்றை திராவிடப் பண்பாடு என்றும், திராவிடர் நாகரிகம் என்றும் கூறுவது ஆதாரமற்ற கருத்துரைகள்.

"திராவிடர்" என்ற சொல், 'ழ'கரம் வராத சமஸ்கிருதப் பண்டிதர்கள் தமிழரை அழைத்த சொல். பின்னர், மேல் நாட்டிலிருந்து இங்கு வந்த சரித்திரம், மக்கள் வரலாறு, மொழி நூல் முதலிய கலைகளில் பல அறிஞர்கள் தங்கள் ஆராய்ச்சியில் வருணவழி இனங்களைக் குறிக்கும்போதும், தென்னிந்திய மொழிகளின் புராதன மூலக் குழுவைக் குறிப்பிடும்போதும், "திராவிட இனம்" அல்லது "திராவிட குழு" என்ற சொற்றொடர்களை உபயோகித்திருக்கிறார்கள். ஆகவே வடசொல் பண்டிதர்களையோ, ஸ்மித், கால்டுவெல் போன்ற சரித்திர, மொழிநூல் ஆசிரியர்களையோ ஆதாரம் காட்டி, தமிழனை 'திராவிட'னாக்குவது அழகுமல்ல, அவசியமுமல்ல.

பிற்காலத்தில் எழுந்த "திராவிட மாபாடியம்", "திராவிடப் பிரகாசிகை" என்ற நூற்பெயர்களும் வடசொல் பண்டிதர்களின் கருத்துப்படி, தமிழைக் குறிப்பிடவே, "திராவிடம்" என்ற சொல்லைத் தாங்கி நிற்கின்றன. தாயுமான சுவாமிகளும் "திராவிடத்தில் சிறிது புகல்வேன்" என்னும் பொழுது தமிழையே குறிக்கிறார்.

'தமிழ் வழங்கிய நிலத்தைத் 'தமிழகம்' என்றே நமது முன்னோர்கள், அன்புசொட்ட வாய்நிறையச் சொல்லியுள்ளார்கள். 'திராவிடம்' என்று அழைத்ததே இல்லை. நான்கு மொழி பேசும் நிலப்பரப்பை யாவது, 'திராவிடம்' என்று பழைய இலக்கியத்தில் எங்கேனும் குறிப்பிடுகிறார்களா? இல்லை.

இலக்கியச் சான்றுகளைக்கொண்டு, தமிழகம் விந்தியமலை வரையில் பரந்து கிடந்தது என உறுதிப்படுத்திவிட முடியுமா? அதுவும் முடியாது. "சதுர் ஆரியம் வருமுன் சகமுழுதும் நினது" என்று, மேனாட்டு ஆராய்ச்சி வல்லுநர் நூற்களில் திளைத்தவரும் ஆரியத்தை வெறுத்தவருமான "மனோன்மணியம்" சுந்தரம்பிள்ளை கூறுகிறார். இந்தக் கூற்றை ஒப்புக்கொள்வதாயின், 'தமிழ் உலகம் முழுவதும் பேசப்பட்டது' என்று ஒப்புக்கொள்ள வேண்டும். உலகம் முற்றும் தமிழகமாக இருந்தது என்பது நமக்கு கவைக்குதவாது.

"வடா அது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்"

என்ற காரி கிழாரின் புறநானூற்றுப் பாடல், தமிழகத்தின் வடக் கெல்லை இமயமலை என்று கூறுகிறது. இதை ஒப்புக்கொள்ள முடியுமா? கிருஷ்ண நதிவரை தமிழகம் பரவியிருந்ததென்று சிற்ப சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதாக டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் கூறுகிறார். எல்லை நிர்ணயக் கமிஷன்முன் இது பயன்படுமா?

'தமிழகம்' என்று பழைய இலக்கியங்களில் நெடுகலும் பேசப் படுவது, "வடவேங்கடம் தென்குமரி ஆயிடை தமிழ் கூறும் நல்லுல கத்தையே" (பனம்பாரனார்), "தமிழ் வரம்பறுத்த தண்புனல் நாடு" என்று நெஞ்சை அள்ளச் சித்தரிக்கும் சிலப்பதிகாரமும், காக்கை பாடினியம், சிகண்டியார் போன்ற இலக்கண நூல்களும் வடக்கே திருப்பதி மலையும் தெற்கே குமரிமுனையும், கிழக்கும் மேற்கும் கடல் கள் என்றுமே தமிழ்நாட்டின் எல்லை கூறுகின்றன.

பவணந்தியின் 'நன்னூல்' பாயிரம், (இது மிக பிற்பட்ட காலத்து நூல்) "குணகடல், குமரி குடகம், வேங்கடம்" என்று தமிழ்நாட் டின் எல்லை கூறுகிறது. இது, அராபிக்கடல் வரையிலிருந்த தமிழ் நாட்டின் மேற்கெல்லையை, குடகுவரையில் குறுக்கிவிட்டது.

பழைய நூல்கள் 'வடுகர்' என்றும் 'தெலுங்கம்' என்றும், 'கரு நாடர்' என்றும், 'கொங்கணர்' என்றும் கூறுகின்றன. 'திவாகர' நிகண்டு, 'கொல்லம்' (கேரளம்) என்று தமிழகத்தைச் சுற்றிக்கிடந்த ஒரு நாட்டைக் குறிப்பிடுகிறது.

பழைய இலக்கியங்களில் ஆரியர் என்ற சொல் பயிலப்படுகிறது. "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்!" என்று 'திருவாசகம்' கூறு கிறது. இங்கும் 'திராவிடன்' கண்டாய் என்று சொல்லவில்லை. "வடவாரியரோடு" என்று சிலப்பதிகாரத்தில் நலநாட்டினரைக் குறிப்பிடுகிற இடத்திலும், 'திராவிடர்' என்ற சொல் வரவில்லை என் பதும் குறிப்பிடத் தக்கது.

இவ்வாறாக, பழைய இலக்கியச் சான்றுகளை நோக்கின், "திரா விட இனமும்" இருந்ததில்லை, "திராவிட நாடும்" இருந்ததில்லை என்பது விளங்கும்.

"திராவிட நற்றிரு நாடு" என்று 'மனோன்மணியம்' சுந்தரம் பிள்ளை கூறியிருக்கிறார் என்று தி.மு.க.வினர் "திராவிட நாடு" கோஷத்தை நியாயப்படுத்த எடுத்துக்காட்டுகிறார்கள். அதே பாட் டில் "நில மடந்தை"யின் அழகொழுகும் முகாரவிந்தம், 'பரதகண்டம்' என்றும் அந்த முகத்தின் சிறு நெற்றி 'தக்கணம்' என்றும் அதில் அணிந்துள்ள பொட்டு 'திராவிட நற்றிரு நாடு' என்றும், அந்தப் பொட்டின் நறுமணமே 'தமிழணங்கு' என்றும் சுந்தரனார் வருணித்

திருக்கிறார். அப்படியிருக்க, தி.மு.க.வினர், 'திராவிட நற்றிரு நாடு' என்று குறிப்பிடுகிறார்களே யன்றி, அதற்கு முன்புள்ள 'எழிலொழுகும் பரதகண்டத்தையும்', 'தமிழணங்கை'யும் ஏன் இணைத்துக் கூறுகிறார்களில்லை!

நம்மைப் பொறுத்தமட்டில் நாம் அன்றைய இலக்கியச் சான்றுகளைச் சார்ந்து நிற்கவில்லை. ஏனென்றால், அன்றைய இலக்கியத்தில் காண்பது ஒன்று இன்று யதார்த்தத்தில் உருவாகியிருப்பது மற்றொன்று. இன்றைய யதார்த்தம் நமக்கு வழிகாட்டுவதா? அல்லது யதார்த்தத்திற்குப் புறம்பான அன்றைய இலக்கியம் நமக்கு வழி காட்டுவதா? இன்றைய பிரத்யட்சச் சூழ்நிலையும், சரித்திர வளர்ச்சியும், மக்கள் விருப்பமும்தான் நமக்கு ஆதாரம்.

# ஐக்ய தமிழகம் :

## தமிழ் மக்களின் அரசியல் பொது கோஷம்

★ தமிழ் மக்கள் ஒன்றுபட்டு ஒரே ஆட்சியின் கீழ் வர வேண்டும்.

★ இன்றைய சென்னை ராஜ்யத்தின் தமிழ் மொழி ஆட்சி மொழியாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

★ திரு-தமிழகம், தாய்த் தமிழகத்துடன் இணைவதற்காக நடைபெறும் போராட்டத்தை முழு மூச்சுடன் ஆதரிக்க வேண்டும்.

★ பாண்டிச்சேரி, காரைக்காலில் நடைபெறும் இணைப்புக் கிளர்ச்சிக்குப் பூரண ஆதரவு கொடுக்க வேண்டும்.

இத்தகைய கோஷங்கள், இன்று, தமிழ்ப் பெருமக்கள் அனைவருக்கும் அரசியல் பொது கோஷங்கள். காங்கிரஸ் தலைமைக்கு மொழி ராஜ்ய அமைப்பில் எதிர்க் கருத்து இருந்த போதிலும், திராவிட இயக்கத் தலைமைக்கு "திராவிடநாடு" கோரிக்கையில் தனிக் கருத்து இருந்த போதிலும் மேற்படி பொது கோஷங்களின் அடிப் படையில், ஓரணி வகுக்க முடியும், வகுத்தும் வருகிறோம்.

அண்மையில் சென்னையில் நடந்த அன்னியத் திட்டு எதிர்ப்பு மகாநாட்டில் பங்கு பூண்ட சகல கட்சிப் பிரமுகர்களும், பண்டிச்சேரி, காரைக்கால்களை மீட்ட, தமிழ் மறவர்களாகிய நாம், உயிர்கொடுத்தும் போராடுவோம் என்று உணர்ச்சிக் கடல் கொந்தளிக்க வீரமுழக்கம் புரிந்தனர். பின்னர் நடந்தேறிய தமிழ் மொழியாட்சி மாநாட்டிலும் காங்கிரஸ்காரர்களும், திராவிட இயக்கத்தினரும், தமிழரசுக்கழகத்தாரும், கம்யூனிஸ்ட்களும், இதர கட்சிக்காரர்களும் ஒரே மேடையில் நின்று, ஒரே குரலில் "தமிழ் மொழி ஆட்சி அடைந்தே தீர்வோம்" என்று உறுதி பூண்டனர். குமரிமுனையும், திரு-தமிழகமும் தாய்த் தமிழகத்தோடு இணைந்து ஒரே குடை நிழலில் வாழ்வுகாண திரு. தமிழக மக்களுக்கு, தாய்த் தமிழக மக்கள் நெடுகலும் தோளோடு தோள் நின்று கட்சிபேதம் பாராட்டாது துணைபுரிந்து வருகின்றனர். இந்த ஐக்ய தமிழக உணர்ச்சி மென்மேலும் பெருகி வருகிறது.

நமக்குள் பலப்பல பிரச்னைகளில் பற்பல கருத்து மாறுபாடுகள் வேறுபாடுகள் இருக்கலாம். ஆயினும் மேற்கூறிய பொதுவான பிரச்னைகளின் அடிப்படையில், காங்கிரஸ்காரர்கள், திராவிட இயக் கத்தினர், தமிழரசுக் கழகத்தார், கம்யூனிஸ்டுகள், இதர கட்சியினர்—

ஆகிய யாவரும் ஒன்றுசேர முடியும் என்று கம்யூனிஸ்ட் கட்சி உறுதியாக நம்புகிறது. தமிழ் மக்களுக்கு அவசர அவசியமான இத்தகைய ஒற்றுமையை உருவாக்க, எல்லாக் கட்சிகளோடும், தொழிலாளர், விவசாய சங்கங்களோடும், சகல ஸ்தாபனங்களோடும், பரிபூரணமாக ஒத்துழைக்க உறுதி பூண்டிருக்கிறது.

"எல்லோரும் இந்நாட்டு மக்கள்—நாம்
எல்லோரும் இந்நாட்டு மன்னர்" (பாரதி)

"நம்மதடா இந்நாடு—என்றும்
நாமிந்நாட்டில் வேந்தர்
சமம் இந்நாட்டு மக்கள்—என்றே
தாக்கடா வெற்றி முரசை!
தமிழர் என்று சொல்வோம்—பகைவர்
தமை நடுங்க வைப்போம்" (பாரதிதாசன்)

## 'ஐக்ய தமிழகம் அடைந்தே தீர்வோம்'

★

# வெளிவந்துவிட்டது!

## "மக்களுக்குத் திண்டாட்டம் வெள்ளையருக்குக் கொண்டாட்டம்"

பக்கங்கள் 25 விலை 3 அணு

இதில், சென்னை சட்டசபை பட்ஜெட் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் தோழர் பி. ராமமூர்த்தி நிகழ்த்திய பிரசங்கம் முழுமையும் அப்படியே கூட்டாமல் குறைக்காமல் கொடுக்கப்பட்டுள்ளது.

ராஜாஜி சர்க்காரின் ஜனவிரோதக் கொள்கைகளை புள்ளி விபரங்களுடன் அம்பலப்படுத்தியிருக்கிறார், ராமமூர்த்தி. அனைவரும் அவசியம் படிக்கவேண்டிய 'சூடான' நடப்பு அரசியல் வெளியீடு.

★

## "பிரிட்டிஷ் கியானவில் நடப்பதென்ன?"

பக்கங்கள் 18 விலை 2 அணு

காமன்வெல்த் ஜனநாயகம் யுத்தக் கப்பல் ஜனநாயகம் என்பதை அம்பலப்படுத்துகிறது, பிரிட்டிஷ் கியானவில் நடக்கும் சம்பவங்கள்.

கியானத் தலைவர்கள் இப்பொழுது இந்தியாவுக்கு வந்திருக்கிறார்கள். அவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரி சபை டிஸ்மிஸ் செய்யப்பட்டதேன்? அங்கு அரசியல் சட்டம் ரத்தாகி இராணுவ யதேச்சாதிகாரம் நடப்பதேன்? இப்பேய்த் தாண்டவங்களுக்குப் பின்னுள்ள சக்திகள் யாவை? கியான தொழிலாளர, விவசாய மக்களின் நிலைமை என்ன? அவர்கள் எவ்வாறு வீரதீரத்துடன் போராடுகிறார்கள்? இத்தருணத்தில் இந்திய மக்கள் கடமை என்ன? முதலிய கேள்விகளுக்கு பதிலளிக்கிறது இந்த வெளியீடு.

உடனே பிரதிகளுக்கு முந்துங்கள்!

★

## ஜனசக்தி பிரசுராலயம்

சென்னை-14.

# அவசியம் படியுங்கள்!

| | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1. சீனத்தின் விவசாய சீர்திருத்தம் | 0 | 10 | 0 |
| 2. சீனத்தின் சாதனை ... | 0 | 4 | 0 |
| 3. கட்சியைப்பற்றி—லியூ - ஷோ - சி | 1 | 10 | 0 |
| 4. உட்கட்சிப் போராட்டம் —லியூ - ஷோ - சி | 1 | 0 | 0 |
| 5. மார்க்சிஸமும் தேசிய இனப் பிரச்சினையும்—ஸ்டாலின் | 0 | 10 | 0 |
| 6. லெனினிஸத்தின் அடிப்படை அம்சங்கள்—ஸ்டாலின் | 1 | 8 | 0 |

கிடைக்குமிடம்:

ஜனசக்தி பிரசுராலயம்

இராயப்பேட்டை :: சென்னை - 14.